# வேலணை மத்திய கல்லூரி பழையமாணவர் சங்கம் கனடா நீண்டகாலக் கல்விப்பாரம்பரியத்தை வலுப்படுத்தும் வகையில் அர்ப்பணிப்புடனும் தூரநோக்குடனும் செயலாற்றி வருகின்றது

எமது தாயகத்தில் பல்வேறு பாட சாலைகளில் கல்வி கற்றவர்கள் தமக்குக் கல்வியறிவூட்டிய பாட சாலைகளின் பெயரில் பழைய மாண வர் சங்கங்களை அமைத்து அவற் றின் மூலம் பல நற்காரியங்களை ஆற்றி வருகின்றார்கள். இந்தவகை யில் தீவகத்தின் கலைக் கோயிலாகத் திகழும் வேலணை மத்திய கல்லூரி யின் (வேலணை மத்திய மகா வித்தி யாலயம்) பழைய மாணவர் சங்க மானது முன்னாள் அதிபர்கள் அமரர் திரு. பொ.கேதாரநாதன் திரு. சு. கலா தரன் மற்றும் பிரதி அதிபர் திரு பொன் ஈசன் ஆகியோரது வேண்டு கோளுக்கிணங்க 1995ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் நாள் (02-08-1995) அங்குரார்ப்பணஞ் செய்யப் பட்டுக் கனடாவின் ஒன்ராரியோ மாகாணச் சட்டவிதிகளுக்கமைய ,லாப நோக்கற்ற அமைப்பாகப் பதிவு செய்யப்பட்டுக் (பதிவு இலக்கம்: 1852223) கடந்த 22 ஆண்டுகளாக 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் வாசகத் தைத் தாரக மந்திரமாகக் கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் அதன் மூலம் எமது தாயக மக்களின் முன் னேற்றத்திற்காக மட்டுமன்றி இங்கு ள்ள பழைய மாணவர்கள் முன்னாள் அதிபர் ஆசிரியர்கள் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலன் மற்றும் மகிழ்ச்சிக்காகவும் சிறந்த முறையில் தன்னலமற்ற சேவையாற்றி வருவது இங்குள்ள நேர வசதியின்மையைக் கருத்தில் கொள்ளுமிடத்து மிகக்கடினமான செயற்பாடாகும். எமது கல்விப் பாரம் பரியமானது நீண்ட போராட்டம்



மற்றும் அர்ப்பணிப்புக்கள் மூலம் பேணப்பட்டுப் பல தியாகங்கள் மூலம் மலர்ச்சிகண்டது. இதன் தொடர்ச்சி யாகத் தற்போதய மாணவர்களின் கல்வி மேம்பாடு என்பது எங்கள் சமுதாயத்தின் அறிவுப்பண்பாடு சார்ந்த கனவுகள் மற்றும் சமூகத்தின் நலிந்த தொகுதி மக்களின் எதிர்பார்ப்பு க்களை நிறைவு செய்வதாக அமைய வேண்டும். கூடவே

21ம் நூற்றாண்டின் அறிவுசார் பொரு ளாதார கட்டமைப்புக்கு ஈடு கொடுப்ப தாகவும் அமைய வேண்டும் என்பதே என் போன்ற பழைய மாணவர்களின் அவா. தற்போதய நிர்வாகத்தினராகிய நாம் எமது தாயக மக்களின் நீண்ட காலக்கல்விப் பாரம்பரியத்தை வலு ப்படுத்தும் வகையில் எமது சங்கத் தின் செயற்பாடுகளை முன்னெடுத்து எமது இளைய சந்ததியினரின் கல்வி கலாச்சார முன்னேற்றத்தை இலக் காகக் கொண்டு மிகுந்த அர்ப் பணிப்புடன் செயலாற்றி வருவதனை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இச்சங்கம் தனது நீண்டகாலச் சிறப் பான செயற்பாடுகளின் மூலம் கனடா வில் இயங்கும் மூத்த மற்றும் முதன் மையான பழைய மாணவர் சங்கங் களில் ஒன்றாகத் திகழ்கின்றது. குறிப்பாகக் கடந்த ஆறாண்டுகளாக இச்சங்கம் நடைமுறைப்படுத்திவரும் அர்த்தமுள்ள செயற்திட்டங்கள் மிக வும் பயனுள்ளதும் அனைவராலும் பாராட்டப்பட்டும் மற்றவர்களால் பின் பற்றப்பட்டும் வருகின்றதென்றால் அது மிகையல்ல. இதற்குத் தூய்மை யான சிந்தனை உயர்ந்த இலட்சியம் செம்மையான செயற்பாடு உண்மை யான உழைப்பு சிறந்த நிர்வாகம் என்ற எமது இலக்கும் அதை அடைய நாம் பின்பற்றுகின்ற இலக் கணமும் பழைய மாணவர்கள் புலம் பெயர் மண்ணின் வர்த்தகப் பிரமுகர் கள் பத்திரிகை வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தினரின் ஆதரவும் தான் பிரதான காரணங்கள் என்பதைக் கூறிக் கொள்வதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன். மேலும் கல்லூரிக்கு இப்புத்தாண்டு முதல் மூன்று புதிய பிரதி அதிபர்கள் நியமிக்கப்பட்டு ள்ளதுடன் கல்லூரி தொடர்ந்து முன் னேற்றப்பாதையில் செல்வது குறிப் பிடத்தக்க விடயமாகும்.

சங்கத்தின் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கு அடுத்து வரும் நிர்வாகங்களுக்கும் தங்கள் நல்லாதரவு தொடர வேண்டுமென அன்புரிமையுடன் கேட்டுக் கொள்வ தோடு இதுவரை வழங்கிய ஆதர விற்கு சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியையும் இவ்வரிய சந்தர்ப்பத்தில் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்று எமக்கு அறிவையும் ஒழுக் கத்தையும் ஒருங்கே ஊட்டி வளர் த்து ஆற்றலில் சிறந்தோர்களாக்கிய எமது கல்லூரி அன்னைக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் இதுவேயாகும்.

**சி. இளஞ்செழியன் (தலைவர்)**

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா

பிற்குறிப்பு: சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வழமைபோல் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.